



To

BOOK POST

If Undeliveried please return to ...

**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

**Santhom Press, Diocese of Marthandam** Mob : +91 94-42-469852

# Bulletin
## Diocese of Marthandam
### மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்




மலர் 21 மே 2025 இதழ் 5

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.05.2025 | Thursday | 6.30 am<br><br>6.00 pm | Holy Mass<br>Province Day - DM<br>Feast Mass | Marthandam<br><br>Adaikakuzhi |
| 02.05.2025 | Friday | 10.00 am<br>5.30 pm | Class - MBOC Teachers<br>Feast Mass | Kuzhithurai<br>Chellamkonam |
| 03.05.2025 | Saturday | <br><br><br>6.00 pm | Feast Mass<br><br><br>Vespers | Paipadu - Arch Diocese of Tiruvalla<br>Chinna Edathuva |
| 04.05.2025 | Sunday | 9.00 am<br>2.30 pm<br>6.00 pm | Feast Mass<br>Feast Mass<br>Preaching | Fathimanager<br>Anakkarai<br>Poonthurai |
| 08.05.2025 | Thursday | 6.30 am<br>9.30 am<br><br>11.00 am | Jubilee Mass - DM Convent<br>Laying Foundation Stone Care Home<br>Ignite 2025 - Class | Marthandam<br>Anakkarai<br>Mar Ivanios School, Kuzhithurai |
| 09.05.2025 | Friday | 6.30 am | Profession - DM Convent | Marthandam |
| 10.05.2025 | Saturday | 10.00 am | Missionaries Gathering | Palai |
| 11.05.2025 - 26.05.2025 | Sunday - Monday | <br>11.00 am | <br>House Warming | Germany<br>Adhichavilagam |
| 27.05.2025 | Tuesday | 7.00 am | Minor Orders & Vestition | Elavuvilai |
| 30.05.2025 | Friday | 8.30 am | Orientation Class for Theology Students | Trivandrum |
| 31.05.2025 | Saturday | | Jubilee Mass<br>Sr. Prasana | Kuzhinjanvilai |
| 31.05.2025 | ,, | 5.30 pm | Jubilee Mass Sr. Alfina | Unnamalaikadai |




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 22 மே 2025 இதழ். 5


**Patron**
His Excellency
Most Rev. Vincent Mar Paulos

**Editor**
Rev. Fr. Franklin Jose
The Chancellor

**Cover Design**
Mrs. Uni Kumari B.

**Printing**
Santhom Press,
Marthandam

**Published By**
The Chancellor
Diocese of Marthandam


மலர். 22 ஏப்ரல் 2025 இதழ். 4


**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com




# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the
# Diocese of Marthandam





மலர்.22 மே 2025 இதழ்.5

**முக்கியமான நாட்கள்**

**மே 2025**

- 01 உலக தொழிலாளர் தினம்
- 03 உலக செய்தித்தாள் சுதந்திர
- 11 அன்னையர் தினம்
- 15 குடும்பங்களின் சர்வதேச தினம்
- 17 உலக தொலைத்தொடர்பு தினம்




## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | Circulars | 3-9 |
| 2. | குருப்பட்ட நிகழ்வுகள் | 10 |
| 3. | ஆயர் மார் எப்ரேம் ஆண்டகையின் 28-வது ஆண்டு நினைவு பாதயாத்திரை மற்றும் நினைவுதின கொண்டாட்டம் | 11 |
| 4. | 15-வது கல்வாரிமலை திருப்பயணம் மற்றும் 40-ம் வெள்ளி சிலுவைப்பாதை | 12 |
| 5. | குருமட செய்தி | 13 |
| 6. | கேர் ஹோம் அடிக்கல் நாட்டுதல் | 14 |
| 7. | மார்த்தாண்டம் மறைமாவட்ட இளையோர் இயக்க கூட்டம் | 14 |
| 8. | MIDS | 15 |
| 9. | பெயர்விழா நல்வாழ்த்துக்கள் | 18 |
| 10. | MCA | 19 |
| 11. | Health for One Million (Hom) | 20 |
| 12. | திருமண ஆயத்தப்பயிற்சி | 20 |
| 13. | ஆயரின் ஏப்ரல் மாத நிகழ்வுகள் | 21 |
| 14. | இம்மாதம் நினைவு கூர | 23 |
| 15. | Bishop's Diary | 24 |


Printed by
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852



### மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபை
## இறையழைத்தல் தினம் - 2025

### இறையழைத்தலுக்கான
### ஆயர் மாமன்ற பணிக்குழு தலைவர் விடுக்கும் சுற்றுமடல்

*மேதகு ஆயர்களே, மதிப்புக்குரிய கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, மதிப்புக்குரிய ரம்பான்மார்களே, அருட்தந்தையர்களே, திருத்தொண்டர்களே, துறவறத்தார்களே, அன்பான இறைமக்களே!*

மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருச்சபையில் மே மாதம் 25-ம் தேதி இறையழைத்தல் தினம் கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டைய இறையழைத்தல் தினம் நம் ஆண்டவரின் விண்ணேற்றத் திருநாள் மற்றும் பெந்தக்கோஸ்து திருநாளுக்கு இடைப்பட்ட நாட்களில் வருகிறது. காத்திருப்பு நாட்களில் தூய கன்னி மரியாவும் சீடர்களும் தூயஆவியாருக்காக தாகம் கொண்டு காத்திருந்து மன்றாடியது போல இக்காலயளவில் தூய ஆவியார் ஏராளம் இறையழைத்தல்களை வழங்கி திருச்சபையை வளப்படுத்த இறைவேண்டலுடன் காத்திருப்போம்.

மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் நினைவுக்கு முன் இதய அஞ்சலியை சமர்ப்பிக்கிறேன். பல காலகட்டங்களில் திருத்தந்தை வெளியிட்ட திருச்சபை படிப்பினைகளில் இறையழைத்தலை பற்றிய சில கருத்துகளை இந்த சுற்றறியிக்கை வாயிலாக பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக, அர்ப்பண வாழ்வு என்பது ஒரு கொடை. திருச்சபைக்கு கடவுள் வழங்கிய கொடை. கடவுள் தனது திருப்பணிக்காக ஆண்களையும் பெண்களையும் தேர்ந்தெடுப்பது ஒரு கொடையே. தேர்ந்தெடுக்கப்பட்டோர் பயணிக்கும் பட்டியலில்

ஒருவரை இணைப்பது என்று இதனை புரிந்துக்கொள்ள கூடாது. மாறாக, ஒருவரின் இதயத்திற்கான கொடையென இதை புரிந்துக்கொள்ள வேண்டும். குருத்துவம் மற்றும் துறவறம் என்னும் வாழ்க்கை நிலை வழியாக இயேசுவை பின்பற்ற வேண்டுமெனில் முதலில் இறையழைத்தல் என்னும் வாசல் வழியாக நுழைய வேண்டும். கிறிஸ்துவே வாசல். அவரே அழைப்பவர், துவக்கமிடுபவர், செயல்படுத்துபவர். ஆகவே, அழைப்பவர் இயேசு என்பதில் தெளிவாய் இருப்போம். அழைப்பவருக்கு விரைந்து பதிலளிப்பது அவர்மீது நாம் கொண்டுள்ள மதிப்பு மற்றும் அன்பின் வெளிப்பாடாகும்.

இரண்டாவதாக, இயேசு தேர்ந்தெடுக்கப்பட்டோரின் குணநலன்களை அல்ல, அவர்களின் நம்பிக்கையே கருத்தில் கொள்கிறார். “உமது சொற்படியே வலைகளைப் போடுகிறேன்” (லூக் 5:5) என்ற சீமோன் பேதுருவின் நம்பிக்கையை இதன் அடிப்படை அலகு. இறையழைத்தல் இறைச்செயல். எந்தவொரு மனிதனும் தனது தனிப்பட்ட அழைப்புக்கு பொறுப்பல்ல. ஆனால், பெற்றுக்கொண்ட அழைப்புக்கு பதிலளிக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். மனிதனின் பலவீனம் இறையழைத்தலுக்கு ஒரு தடையாக இருக்கக் கூடாது. பலவீனத்தில் கடவுளின் ஆற்றல் வெளிப்படும் என்ற நம்பிக்கையை நமதாக்கி கொள்ள வேண்டும். உருமாற்றம் மற்றும் புதுப்பிக்கும் அவரது இரக்கத்தின் ஆற்றலில் நாம் இன்னும் அதிகமாக சார்ந்திருக்க வேண்டும். தோல்விகள் மற்றும் நெருக்கடிகளால் நாம் துவண்டு போகக் கூடாது. நம்பிக்கையுடன் வலைகளை வீசுவதே



நமது ஒரே கடமை. மீதமுள்ளவற்றை கடவுள் கவனித்துக் கொள்வார். ஆண்டவரின் அழைப்புக்கு “நான் ஆண்டவரின் அடிமை” (லூக் 1:38) என்று பதில்மொழிந்த தூய மரியா நமக்கு ஒரு முன்மாதிரியே.

மூன்றாவதாக, விட்டுவிட தயாராகும் போது மட்டுமே அர்ப்பண வாழ்வு சாத்தியமாகிறது. ஒவ்வொரு இறையழைத்தலிலும் நம்பிக்கை அனுபவத்தின் பகுதியான விட்டுவிடுதலின் தளம் உள்ளது. ஆபிரகாமைப்போல சொந்த நாட்டை விட்டு புதியதொரு நாட்டிற்கு கடவுள் நம்மை வழிநடத்துவார் என்ற எதிர்நோக்குடன் முன்னேறுங்கள் என்பதையே இது பொருள்கொள்கிறது. இப்பேற்பட்ட முன்னோக்கிய நகர்வை ஒருவரின் வாழ்க்கை, உணர்வுகள் அல்லது மனிதகுலத்தின் மீதான வெறுப்பின் அடையாளமாக கருதக்கூடாது. மாறாக, கிறிஸ்துவை பின்பற்ற ஆயத்தமாகுபவர்கள் இறைவனுக்கும் இறையரசுக்கும் பணிவிடை புரிவதற்காக தங்களையே அர்ப்பணிக்கிறார்கள் என்றே கருத வேண்டும். இயேசு கூறுகிறார்: “என் பெயரின் பொருட்டு வீடுகளையோ, சகோதரர்களையோ, சகோதரிகளையோ, தந்தையையோ, தாயையோ, பிள்ளைகளையோ, நிலபுலன்களையோ விட்டுவிட்ட எவரும் நூறு மடங்காகப் பெறுவர். நிலை வாழ்வையும் உரிமைப் பேறாக அடைவர்” (மத் 19:29).

நான்காவதாக, திருச்சபையின் ஒவ்வொரு இறையழைத்தலும் இயேசுவின் இரக்கமிகு பார்வையில் ஆரம்பமாகிறது. இறையழைத்தல்கள் திருச்சபையில் பிறக்கிறது, திருச்சபையில் வளர்கிறது, திருச்சபையால் நிலைநிறுத்தப்படுகிறது.

ஐந்தாவதாக, குருத்துவமும் துறவறமும் ஒரு தொழிலோ அல்லது தனிப்பட்ட முன்னேற்றத்திற்கான வழிமுறையோ அல்ல. கிறிஸ்து தனது மந்தையின் மீது கொண்ட தியாக அன்பில் பங்கு கொள்ளும் ஓர் திருப்பணியாகும். தனிப்பட்ட விதமாக பின்பற்றுவதற்கும், அவரோடு உறவாடுவதற்கும் இயேசு இன்றும் அனைவரையும் அழைத்து கொண்டே இருக்கிறார். அவரது இறையரசில் முழுமையாக பங்குகொள்ள நம்மை அழைக்கிறார் என்பதை அவர் நமக்கு உணர்த்தினால் அவரை பின்பற்ற தயங்க வேண்டியதில்லை. இறைவனுக்கும் இறைசாயலில் படைக்கப்பட்ட நமது சகோதரர்களுக்கும் பணிவிடைபுரிய நம்மை முழுமையாக அர்ப்பணம் செய்வது அழகானதும், அருள்மிகுந்ததுமாகும்.

திருத்தந்தை வினவுகிறார்: ஆகையால் இளையோர்களே, இயேசுவை இன்னும் நெருக்கமாகப் பின்பற்ற உங்களுக்கு விருப்பம் இருக்கிறதா? சிந்தியுங்கள், ஜெபியுங்கள், ஆண்டவர் உங்களோடு பேச அனுமதியுங்கள். நீங்கள் எப்போதாவது ஆண்டவரின் குரலுக்கு செவிமடுத்திருக்கின்றீர்களா? இன்னும் நெருக்கமாக அவரை பின்பற்ற அழைத்திருக்கிறாரா? இயேசுவின் சீடராக நீங்கள் விரும்புகிறீர்களா? நாம் நமது இளமையை உன்னத கொள்கைக்கு அர்பணிக்க வேண்டும். உங்களை பற்றிய அவரின் விருப்பத்தை அவரிடம் கேளுங்கள்.

மனுவுருவாகிய வார்த்தைக்கு செவிமடுத்து, ஏற்றுக்கொண்டு, அனுபவித்த தூய கன்னி மரியா நமது பயணத்தில் நம்மோடு இணைந்து பயணித்து நம்மை பாதுகாக்கட்டும். ஆண்டவரின் அழைப்புக்கு அனுமதி அளித்த தூய கன்னிமரியாவின் பரிந்துரையை நாடுவோம்.



திருச்சபையில், குறிப்பாக சமர்ப்பண சமூகங்களில் இறையழைத்தலை ஊக்கப்படுத்த மேற்கொள்ளப்படும் அனைத்து செயல்பாடுகளின் வெற்றிக்காக மன்றாடுகிறேன். இந்த இலக்கை நோக்கி செயல்படும் திருச்சபையின் தலைவர், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவிகள், பொதுநிலையினர் ஆகியோரை நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்துகிறேன்.

ஆண்டவர் தமது இரக்கத்தையும் அருளையும் உங்கள் அனைவர் மீதும், நமது திருச்சபையின் மீதும் பொழிவாராக. மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை குருத்துவ மற்றும் துறவற இறையழைத்தல்களால் வளப்படுத்தப்பட வேண்டுமென்று நாம் முழுமனதுடன் மன்றாடுவோம். பெந்தக்கோஸ்து திருநாளின் ஆசீர்வாதங்களை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*இப்படிக்கு,*
ஆண்டவரில் உங்கள் எளிய ஊழியன்

† மேதகு **சாமுவேல் மார் ஐரேனியோஸ்**
தலைவர், இறையழைத்தலுக்கான ஆயர் மாமன்ற பணிக்குழு,
பத்தனம்திட்டை மறைமாவட்ட ஆயர்.

**Most Rev.Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist - 629 165

Cir. No. 4/2025 05.05.2025

# CIRCULAR

**ஆண்டவர் இயேசுவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் வாழ்த்துக்களும் வணக்கங்களும்...**

***கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே / அருட்சகோதரர்களே அருட்கன்னியர்களே / இறைமக்களே,***

ஒரு மறைமாவட்டத்தை பொறுத்தவரையில் அதன் கரங்களாக செயல்படுவது பணிக்குழுக்கள். பணிக்குழுக்களின் பணிகளை ஒருங்கிணைப்பது மேய்ப்புப்பணி நிலையம். நம்முடைய மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் நோக்குடன் குழித்துறையிலுள்ள மார் எஃரேம் வளாகத்தில் அமைந்த மேய்ப்புபணி நிலைய பழைய கட்டிடம் ஒன்று மறுசீரமைப்பு செய்யப்பட்டு வருகிறது. இந்த பணிகளில் மறைமாவட்ட மக்களின் பங்கேற்பு இருக்க வேண்டுமென்று நான் மிகவும் விரும்புகின்றேன். மேய்ப்புப்பணி நிலையத்தில் இன்னும் ஏராளமான பணிகள் நிறைவு செய்ய வேண்டியுள்ளது. நாம் இப்போது புதுபித்து கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் கட்டிடத்தை இந்த ஆண்டு ஜூன் மாதம் 28-ம் நாள் நாம் அர்ச்சிக்க இருக்கின்றோம். அன்றைய தினம் நமது மறைமாவட்ட தினத்தையும் கொண்டாடுகின்றோம்.



மேய்ப்புப்பணி நிலையம் கட்டி எழுப்புவதில் இறைமக்களின் பங்களிப்பு இன்றியமையாதது. எனவே ஜூன் மாதம் 1-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் சேகரிக்கும் சிறப்புக் காணிக்கையை இந்த நோக்கத்திற்காக மறைமாவட்ட நிதி அலுவலகத்தில் ஜூன் மாதம் 10-ம் தேதிக்குள் ஒப்படைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் நன்கொடைகளை பொருட்களாக வழங்க விரும்புவோர் நிதிக்காப்பாளர் தந்தையை அணுகவும். நம்முடைய பயிற்சிகளுக்கும் பல்வேறு பணிகளுக்கும் இந்த நிலையம் நமக்கு மிகவும் உறுதுணையாக அமையும். எனவே மனதார இம்முயற்சியில் ஒத்துழைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் செபத்துக்கும் ஒத்துழைப்புக்கும் மிகுந்த நன்றி.

பாசமிக்க பங்குத்தந்தையர்கள் இந்த திட்டத்தில் தனிக்கவனம் செலுத்தி மக்களை ஊக்குவித்து ஒத்துழைக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இறையாசீர் உங்களோடு தங்குவதாக!

***அன்புடன்,***

**† மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்

# குருப்பட்ட நிகழ்வுகள்

மார்த்தாண்டம் மறைமாவட்டத்திற்காக இவ்வாண்டு 8 திருத்தொண்டர்கள், ஏப்ரல் மாதம் 26-ம் தேதி, சனிக்கிழமை அன்று மரியாகிரி, புனித விண்ணேற்பு அன்னை மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் வைத்து, மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் திருக்கரங்களால் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டனர். இக்குருப்பட்ட நிகழ்வில் நம் மறைமாவட்டத்தை சார்ந்த குருக்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் மற்றும் பிற மறைமாவட்டத்தை சார்ந்த குருக்களும் கலந்துக் கொண்டு புது குருக்களுக்காக ஜெபித்தார்கள். சிறப்பாக, இக்குருப்பட்ட நிகழ்வில் புது குரு அருட்தந்தை ரெவின் அவர்களின் உபகாரியான திரு. ஜார்ஜ் வர்க்கீஸ், திருமதி ப்ரீத்தா குடும்பத்தாரும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

புது குருக்கள் தங்களுடைய நன்றித் திருப்பலியை ஏப்ரல் மாதம் 27-ம் தேதி, ஞாயிற்றுக்கிழமை மற்றும் 28-ம் தேதி, திங்கள்கிழமையிலுமாக தங்களுடைய சொந்த ஆலயங்களில் வைத்து, மேதகு ஆயர். வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களின் முன்னிலையில் நிறைவேற்றினர். குருப்பட்டம் மற்றும் முதல் நன்றி திருப்பலியிலும் ஏராளமான இறைமக்கள் கலந்து கொண்டு புது குருக்களுக்காக ஜெபித்தார்கள்



# ஆயர் மார் எப்ரேம் ஆண்டகையின் 28-வது ஆண்டு நினைவு பாதயாத்திரை மற்றும் நினைவுதின கொண்டாட்டம்

ஆயர் லாரன்ஸ் மார் எஃப்ரேம் ஆண்டகை நினைவு பாதயாத்திரையானது 07.04.2025 அன்று வெள்ளெலும்பு ஆலயத்தில் மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை மற்றும் பாறசாலை மறைமாவட்ட ஆயர் Dr. தோமஸ் மார் எவுசோபியோஸ் ஆண்டகை ஆகியோர் தலைமையில் திருப்பலி மற்றும் தூபமன்றாட்டு நடத்தப்பட்டு துவங்கப்பட்டது.

அதன்பின் பின்குளம் பங்கில் வைத்து பாதயாத்திரையானது ஆரம்பித்து மதியம் குழித்துறை மேய்ப்புப்பணி நிலையம் வந்தடைந்தது. பின்னர் ஆயர் தலைமையில் மாலையில் பாதயாத்திரை துவங்கி பேராலயம் வந்தடைந்து தூப மன்றாட்டுடன் பாதயாத்திரையானது நிறைவடைந்தது. இதில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் சுமார் 150 இறைமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# 15-வது கல்வாரிமலை திருப்பயணம் மற்றும் 40-ம் வெள்ளி சிலுவைப்பாதை

இறச்சகுளம், தூய மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தில் வருடந்தோறும் நடைபெறுகின்ற 40-ம் வெள்ளி சிலுவைப் பாதையானது இறச்சகுளம் கல்வாரி மலையில் வைத்து நடைபெற்றது. இவ்வாண்டும் மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் தலைமையில் 11.04.2025 அன்று நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சிலுவைப்பாதையானது நடைபெற்றது. இந்த சிலுவைப் பாதையில் இயேசுவின் தியாகத்தை உணரவும் நம்மை நாமே இயேசுவின் பாடுகளால் புனிதப்படுத்தவும், இயேசுவோடு இணைந்து பயணிக்கவும், ஏராளமான இறைமக்கள் இச்சிலுவை பாதையில் பங்கெடுத்தனர்.



# குருமட செய்தி

- 06-04-2025 அன்று இறைஅழைத்தல் ஊக்குவித்தல் நாகர்கோவில் மறைவட்டத்தில் உள்ள பங்குகளில் பங்களவில் நம் அருட்சககோதரர்கள் தலைலைமையில் நடத்தப்பட்டது.
- நம் மறைமாவட்ட முதல் ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவுதினத்தை முன்னிட்டு நடைபெற்ற பாதையாத்திரையிலும் நினைவுநாள் திருப்பலியிலும் அருட்சகோதரர்கள் பங்கேற்றார்கள்.
- 08.04.2025 செவ்வாய்கிழமை Lectio Divina -வை குறித்த வகுப்பானது அருட்தந்தை ஆன்றோ ஜெபின் அவர்களால் அருட்சககோதர்களுக்கு எடுக்கப்பட்டது.
- நாற்பதாம் வெள்ளியை முன்னிட்டு இறச்சக்குளம் பங்கில் நடைபெற்ற சிலுவைபாதையில் அருட்சகோதரர்கள் பங்கெடுத்தனர்.
- இவ்வாண்டு அருட்சகோதரற்களுக்கான கூடுகையானது 21 மற்றும் 22 -ஆம் தேதிகளில் நடைபெற்றது. கூடுகையின்போது மறைமாவட்ட ஆயர் அருட்சககோதர்களை சந்தித்து அவர்களுக்கு அறிவுரைக் கூறி அவர்களுக்காக ஜெபிக்கவும் செய்தார். அன்றைய தினம் காலையில் Shalom Home - இல் உள்ள முதியவர்களை சந்திக்கவும் சுற்றுப்புறம் சார்ந்த வேலைகளையும் செய்தனர். மாலையில் செக்கீட்டுவிளை பங்கில் உள்ள குடும்பங்களை குடும்ப வாரியாக சந்தித்து Lectio Divina -வை வழிநடத்தவும் செய்தனர்.

# கேர் ஹோம் அடிக்கல் நாட்டுதல்

அணக்கரை மேரி மவுண்டு ஆங்கில வழி கல்வி கூடத்தினுடைய அருகாமையில் கேர் ஹோமிர்க்கான அடிக்கல் நாட்டப்பட்டது. மேதகு ஆயர் அவர்களும், முதன்மை குரு அவர்களும், மறைமாவட்ட நிதிக்காப்பாளர் அவர்களுடைய தலைமையில் மருத்துவர்கள், அரசியல் தலைவர்கள் பங்குப் பேரவையினுடைய உறுப்பினர்கள் இறைமக்களோடு இணைந்து அருட்கன்னியர்கள் முன்னிலையில் அடிக்கல் நாட்டப்பட்டது.

# மார்த்தாண்ட மறைமாவட்ட இளையோர் இயக்க கூட்டம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட இளையோர் இயக்கத்தின் ஓராண்டு செயல்திட்ட கூட்டமானது இறச்சக்குளம் புனித மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தில் வைத்து மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஏப்ரல் மாதம் 6-ம் தேதி நடைபெற்ற இந்த கூடுகையில் மறைவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் மறைமாவட்ட பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். இயக்குநர்கள் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகளும் பங்கேற்றனர்.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

**சிறுதொழில் – உதவித்தொகை வழங்குதல்**

குடும்பம் வாழ்வு பெறல் திட்டத்தின் ஜெர்மென் பயனாளிகளுக்கு சிறுதொழில்கள் செய்து வாழ்வாதாரத்தை மேம்படுத்த 18.03.2025 அன்று உதவித் தொகை வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி சிறுதொழில் செய்வதன் முக்கியத்துவம் குறித்து பயனாளிகளுக்கு எடுத்துக்கூறி அவர்களை ஊக்கப்படுத்தி பயனாளிகளுக்கு உதவித்தொகையினை வழங்கினார்கள். தொடர்ந்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் மற்றும் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் ஆகியோர் பயனாளிகளை சிறுதொழில்கள் செய்து வாழ்வில் முன்னேற வேண்டும் என்று வாழ்த்தினார்கள். இந்த நிகழ்வில் மொத்தம் 80 பயனாளிகளுக்கு ஆடு வளர்த்தல், பசு வளர்த்தல், கோழிவளர்த்தல், பெட்டிக்கடை போன்ற பல்வேறு சிறுதொழில்கள் செய்ய ரூபாய் 8,23,000/- வழங்கப்பட்டது. மேலும் 11 பயனாளிகள் கணக்கு முடித்து இத்திட்டத்திலிருந்து விடைபெற்றனர்.

**ஆடு வழங்குதல்**

மிட்ஸ் நிறுவனத்தின் வழியாக சமூகத்தில் நலிவடைந்த பல்வேறு மக்களின் வாழ்வாதாரத்தை முன்னுக்கு கொண்டுவர ஏராளமான உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மிட்ஸ் நிறுவனத்திலிருந்து ஆடு கிடைக்கப் பெற்ற பயனாளியான மங்காடு பகுதியை சேர்ந்த திருமதி உஷா ஆடு வளர்ப்பு தொழிலை சிறப்பாக செய்ததன் பயனாக கிடைத்த ஒரு ஆட்டுக்குட்டியை மிட்ஸ்

நிறுவனத்திற்கு வழங்கினார்கள். அந்த ஆட்டுக்குட்டியை மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் கோணம் பகுதியை சேர்ந்த திருமதி ரெமி அவர்களுக்கு வழங்கினார்கள்.

**உயர்கல்விக்கான வழிகாட்டுதல் பயிற்சி**

மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டு வரும் தளிர்கள் உலகம் திட்டத்தின் பயனாளிகளுக்கு ஆண்டுதோறும் உயர்கல்விக்கான வழிகாட்டுதல் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 12-ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சியானது 27.03.2025 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் பயிற்சியினை துவங்கி வைத்தார்கள். திரு. ஆன்றோ சேவியர் அவர்கள் பயிற்சியினை நடத்தினார்கள். உயர் கல்வி பிரிவுகள் மற்றும் அவற்றிற்கான வேலைவாய்ப்புகள் குறித்து தெளிவாக மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. எந்த பாடத்திட்டம் தேர்ந்தெடுத்தால் எந்தெந்த வேலை வாய்ப்புகள் அதிகமாக உள்ளன என்றும் அதற்கான நுழைவுத் தேர்வுகளை எதிர்கொள்வது எப்படி என்பது குறித்தும் விரிவாக விளக்கப்பட்டதுடன் மாணவர்களின் சந்தேகங்களும் தீர்த்து வைக்கப்பட்டன. பின்னர் மரியகிரி கலைக்கல்லூரி, மலங்கரை ஸ்கூல் ஆப் காமேர்ஸ் ஆகிய கல்வி நிறுவனங்களிலிருந்து பேராசிரியர்கள் வருகைதந்து மாணவர்களுக்கு வழிகாட்டுதல்கள் வழங்கினார்கள். இந்த பயிற்சியானது மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள முறையில் அமைந்ததாக கருத்து தெரிவித்திருந்தனர். இந்த பயிற்சியில் மொத்தம் 83 மாணவ மாணவிகள மற்றும் 23 தாய்மார்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.



**உதவித்திட்டங்கள்**

1. 18.03.2025 அன்று மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்பு திட்டத்தின் வழியாக மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உறுப்பினராக இருந்து இறந்து போன ஐந்து நபர்களின் உறவினர்களுக்கு ரூபாய் 60,000/- இறப்பு நிதி வழங்கப்பட்டது.

2. 19.03.2025 அன்று விருட்சம் கடன் உதவிதிட்டத்தின் வழியாக களியக்காவிளை பணிமண்டலத்திற்குட்பட்ட 12 சுய உதவி குழுக்களில் உள்ள 48 உறுப்பினர்களுக்கு பல்வேறு தேவைகளுக்காக ரூபாய் 24,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

3. 20.03.2025 அன்று Forderverein Indien Hilfe திட்டத்தில் உள்ளபயனாளிகள் 9 பேருக்குரூபாய் 56,221/- மற்றும் Externato De Penefirme திட்டத்தில் உள்ளபயனாளிகள் 10 பேருக்கு ரூபாய் 22,636/- என மொத்தம் ரூபாய் 78,857/- சிறப்பு உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

4. 10.04.2025 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக புற்று நோயால் பாதிக்கப்பட்ட 31 நோயாளிகளின் மருத்துவ செலவிற்காக ரூபாய் 1,65,000/- வழங்கப்பட்டது.

**பிற நிகழ்வுகள்**

1. 20.03.2025 அன்று மிட்ஸ் மற்றும் சுரேஷ் கண் மருத்துவமனை இணைந்து இலவச கண் மருத்துவமுகாமினை புன்னமூட்டுக்கடை பகுதியில் வைத்து நடத்தியது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் மருத்துவ முகாமினை துவங்கி வைத்தார்கள். இந்த முகாமில் புன்னமூட்டுக்கடை சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த சுய உதவிகுழு மற்றும் கோல்பிங் உறுப்பினர்கள், மிட்ஸ் பயனாளிகள் மற்றும் பொதுமக்கள் என மொத்தம் 107 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

# பெயர்விழா நல்வாழ்த்துகள்



அருட்தந்தை. ஜூன் ஜோஸ்
மேய் 08



அருட்தந்தை ஷாஜி கிறிஸ்டோ
மேய் 09

2. 30.03.2025 அன்று ஆற்றூர், மரியகிரி, மிட்ஸ் அலுவலகம் மற்றும் மிட்ஸ் மண்டல அலுவலகம் ஆகிய பகுதிகளில் வைத்து நடத்தப்பட்ட மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வுகளில் தளிர்கள் உலகம் பயனாளிகளான 130 மாணவர்கள் கலந்துகொண்டு தேர்வுஎழுதினர்.

3. 10.04.2025 அன்று தளிர்கள் உலகம் திட்ட பயனாளிகளுக்கான சிறப்பு வகுப்புகள் மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. மாணவர்களுக்கு ஆங்கிலமொழி வகுப்புகள் மற்றும் கிராமியகலை வகுப்புகள் நடத்தப்பட்டன. மாணவர்களின் தாய்மார்களுக்கு திரு. ஜுயஸ் பாண்டியன் அவர்கள் சலவைப் பொருட்கள், வீடு, கழிவறை மற்றும் பாத்திரங்களை சுத்தப்படுத்தும் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியினை வழங்கினார்கள். இந்த பயிற்சியில் 37 தாய்மார்களும், 67 மாணவர்களும் கலந்துகொண்டனர்.



# MCA
## Diocese of Marthandam

மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA சார்பில் நமது முதல் ஆயர் இலாரன்ஸ் மார் எப்ரேம் நினைவு பாதயாத்திரையானது 07.04.2025 அன்று அவரது சொந்த பங்கான வெள்ளெலும்பு M.S.C ஆலயத்தில் காலை 6.30 மணிக்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் மற்றும் பாறசாலை மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் மார் எவுசேபியோஸ் அவர்கள் தலைமையில் திருப்பலி மற்றும் தூப மன்றாட்டுடன் ஆரம்பித்து வாகனத்தில் பின்குளம் பங்கை காலை சுமார் 9.00 மணியளவில் வந்தடைந்தது. அங்கு வைத்து நடந்த தூபமன்றாட்டிற்குப்பின் பாதயாத்திரையானது காலை சுமார் 9.45 மணியளவில் ஆரம்பித்து மதியம் 2.00 மணிக்கு குழித்துறை மேய்ப்புப்பணி நிலையம் வந்தடைந்தது. பின்னர் ஆயர் தலைமையில் மாலை 4.10 மணிக்கு பாதயாத்திரை துவங்கி 5.10. மணியளவில் கதீட்ரல் தேவாலயம் மார்த்தாண்டம் வந்தடைந்து தூபமன்றாட்டுடன் சுமார் 6.00 மணியளவில் நிறைவுற்றது. இதில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் சுமார் 150-க்கும் மேற்பட்ட MCA உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

மேலும் 08.04.2025 அன்று நடந்த நினைவுத் திருப்பலியிலும் MCA உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அன்றைய தினம் விவிலிய வினாடிவினா, கட்டுரைப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு MCA சார்பில் பரிசுகள் வழங்கப்பட்டன.

# HEALTH FOR ONE MILLION (HOM)
## Diocese of Marthandam

HOM அலுவலகத்தில் வைத்து ஏப்ரல் மாதம் 2-ம் தேதி அருட்தந்தை அஜீஷ் குமார் சுய உதவிக்குழு அமைப்பாளர்கள் தலைமையில் அமைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

மார்தாண்டம் மறைமாவட்ட முதல் ஆயர் மேதகு லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் 28-ம் ஆண்டு நினைவு தின பாதயாத்திரை மார் எப்ரேம் வளாகம் குழித்துறை நிறைவுபெற்றது. MCA உறுப்பினர்கள் HOM பணியாளர்கள் மார்த்தாண்டம் மறைமாவட்ட பங்கு மக்கள் கலந்துகொண்டார்கள்.

மார்தாண்டம் மறைமாவட்ட முதல் ஆயர் மேதகு லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் 28-ம் ஆண்டு நினைவு தினவிழாவை முன்னிட்டு ஏப்ரல் 8 -ம் தியதி மார்த்தாண்டம் பேராலயத்தில் வைத்து நடைபெற்ற நிகழ்ச்சியில் மார் எப்ரேம் நினைவு திருமண நிதிஉதவி மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களால் 4 ஏழை பெண்களுக்கு வழங்கப்பட்டது. அருட்தந்தை அஜீஷ் குமார் இதில் கலந்துகொண்டார்கள்.

புற்றுநோய் பாதித்த படுக்கை நோயாளிகளுக்கு மருத்துவ நல உதவி வழங்கல் ஏப்ரல் மாதம் 21-ம் தேதி குழித்துறை மார் எப்ரேம் வளாகத்தில் வைத்து நடைபெற்றது. இதில் 35 பயனாளிகள் கலந்துகொண்டார்கள்.

## திருமண ஆயத்தப்பயிற்சி

2025 மே மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 16, 17 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# ஆயரின் ஏப்ரல் மாத நிகழ்வுகள்



- 4 ➢ 68-வது தென்குருசுமலை திருத்தலத்தில் திருப்பலி நிறைவேற்றி திருப்பயணிகளை ஆசீர்வதித்தார்.
- 5 ➢ குழித்துறை மார் எஃப்ரேம் வளாகத்தில் வைத்து நடைபெற்ற HOM சிறப்புப் பள்ளி ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு தலைமை தாங்கினார்.
- 6 ➢ ஆழ்வார்க்கோயில் தேவாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் வழங்கினார்.
- 6 ➢ இறச்சக்குளத்தில் வைத்து மலங்கரை கத்தோலிக்க இளைஞர் இயக்கம் ஆண்டு திட்டத்தை திறந்து வைத்து இளையோர்களுக்கு வழிகாட்டுதல் வழங்கினார்.
- 7 ➢ ஆயர் லாரன்ஸ் மார் எஃப்ரேம் ஆண்டகையின் சொந்த இடமாகிய வெள்ளெலும்பு தேவாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி நினைவு பாதயாத்திரையை துவங்கி வைத்து அதில் கலந்துகொண்டு மாலையில் அவரது நினைவிடத்தில் தூப மன்றாட்டும் நடத்தினார்.
- 8 ➢ மார்த்தாண்டம் பேராலயத்தில் வைத்து ஆயர் லாரன்ஸ் மார் எஃப்ரேம் ஆண்டகையின் நினைவு திருப்பலியில் தலைமை தாங்கி மறையுரையாற்றி இறைமக்களை ஆசீர்வதித்தார்.
- 8 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்களின் மாத தியானத்தில் கலந்து கொண்டு ஆசீர்வழங்கினார்.

11 ➢ இறச்சக்குளம் திருத்தலத்தில் வைத்து நடைபெற்ற சிலுவைப் பாதையில் கலந்துகொண்டு ஆசியுரையாற்றினார்.

13 ➢ மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலயத்தில் ஒசானா திருச்சடங்குகளை நிறைவேற்றி திருப்பலியும் அற்பித்தார்.

17 ➢ பாஸ்கா வியாழன் பாதங்கழுவுதல் திருச்சடங்குகளை மேக்கோடு ஆலயத்தில் நிறைவேற்றி திருப்பலியும் அற்பித்தார்.

18 ➢ புனித வெள்ளி திருச்சடங்குகளை கோயிக்கல்தோப்பு தேவாலயத்தில் நிறைவேற்றினார்.

20 ➢ உயிர்ப்பு திருவிழா திருப்பலியை கோயிக்கல்தோப்பு தேவாலயத்தில் நிறைவேற்றி இறைமக்களுக்கு உயிர்ப்பு பெருவிழாவின் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்.

20 ➢ மேல்புறத்தில் வைத்து நடைபெற்ற UCC - Easter Program -ல் கலந்துகொண்டார்.

23 ➢ புஷ்பகிரியில் புதுமனை அர்ச்சித்து ஆசீர்வதித்தார்.

24 ➢ சென்னையில் வைத்து நடைபெற்ற தொழிலாளர் ஆணையக் கூட்டத்தில் தலைமை தாங்கினார்.

25 ➢ ஏலாவூர் தியான மையத்தில் நற்செய்திப் பகிர்வை நடத்தி இறைமக்களை ஆசீர்வதித்தார்.

26 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்டத்திற்காக எட்டு திருத் தொண்டர்களுக்கு குருப்பட்டம் வழங்கி குருத்துவ அருட்பொழிவை நிறைவேற்றினார்.

27 ➢ மரியாகிரி, மஞ்சத்தோப்பு, ஆதிச்சவிளாகம், பின்குளம், பனச்சமூடு போன்ற ஆலயங்களில் வைத்து நடைபெற்ற புதுகுருக்களின் முதல் நன்றித் திருப்பலியில் கலந்து கொண்டு, மறையுரையாற்றி அவர்களை ஆசீர்வதித்தார்.

28 ➢ மாத்தார் தேவாலயத்தில் நடைபெற்ற முதல் நன்றித் திருப்பலியில் கலந்துகொண்டு ஆசீர்வதித்தார்.


30 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற நிதி லிமிடெட் கூட்டத்தில் கலந்து கொண்டார்.





## இம்மாதம் நினைவு கூர

மேய் 2025


1 – தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசேப்பு
இறைவாக்கினர் எரேமியா
2 – அலெக்ஸ்லாண்டிரியாவின் மார் அத்தனாசியோஸ்
4 – உயிர்ப்புக்குப்பின் இரண்டாம் ஞாயிறு
மலங்கரை கத்தோக்க பொதுநிலையினர் தினம்
6 – நேர்மையாளர் யோபு, புனித டொமினிக் சவியோ
7 – நம் ஆண்டவர் இயேசுவின் சிலுவை கண்டெடுத்த நாள்
8 – திருத்தூதரான மார் யோவான்
மேரிமக்கள் கன்னியர் சபை நிறுவப்பட்ட நாள் (1938)
இறைவாக்கினர் எசாயா
10 – ஆர்வலராகிய திருத்தூதர் மார் சீமோன்
11 – உயிர்ப்புக்குப்பின் மூன்றாம் ஞாயிறு
சுலாவாய் இனத்தவரின் மார் சிறில் மற்றும் மெத்தோடியோஸ்
12 – சைப்ரசின் மார் எப்பிப்பானியோஸ்
நிசிபிஸ் ஆயரும் மல்ப்பானுமாகிய மார் யாக்கோபு
13 – அந்தியோக்கியாளர் மார் ஈசாக் மல்பான்
14 – மார் ஆதாயி
15 – கதிர்களை முன்னிட்டு தூய இறையன்னையின் நினைவு
மார் பக்கோமியோஸ் ஆண்டகையின் பெயர்விழா
18 – உயிர்ப்புக்குப்பின் நான்காம் ஞாயிறு
20 – நான்கு நற்செய்தியாளர்கள்
21 – புனித ஹெலனாள்
22 – புனித றீத்தா
25 – உயிர்ப்புக்குப்பின் ஐந்தாம் ஞாயிறு
புனித சோபியா
இறை அழைத்தல் தினம்
26 – புனித பிப் நேரி
29 – சுலோக்கோ (நம் ஆண்டவரின் விண்ணேற்றம்)
புனித தியோடோசியா
30 – கேசரியா நகரின் புனித எவுசேபியஸ்
தோமஸ் மார் எவுசேபியஸ் ஆண்டகையின் பெயர்விழா
ஆர்க் நகரின் புனித யோவான்


1


6


10


20



# Congratulations...





## Priestly Ordination

26th April 2025, 2.30 pm
Our Lady of Assumption MSC Church,
Mariagiri

## First Holy Qurbono


Diocese of Marthandam




**Fr. Maria Poppul Revin**
27-04-2025, 4.00 pm
St. Jude's MSC Church,
Adichavilagam



**Fr. Ajin Alocious**
27-04-2025, 9.00 am
Our Lady of Assumption MSC Church,
Mariagiri



**Fr. Ivin Anto**
27-04-2025, 3.30 pm
St. Joseph's MSC Church,
Panachamoodu



**Fr. Jerome Godwin**
27-04-2025, 9.00 am
Our Lady of Assumption MSC Church,
Mariagiri



**Fr. Rejin Raj**
27-04-2025, 5.00 pm
St. Mary's MSC Church,
Pinkulam



**Fr. Sabin**
27-04-2025, 4.00 pm
St. Jude's MSC Church,
Adichavilagam



**Fr. Robin**
27-04-2025, 3.00 pm
Holy Family MSC Church,
Manjathoppu



**Fr. Paulson**
28-04-2025, 4.00 pm
St. Joseph's MSC Church,
Mathar

## ஆயர் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவுதின கொண்டாட்டம்



## மேரி மவுண்டு கேர் ஹோம் அடிக்கல் இடுதல்



## 15-வது கல்வாரிமலை திருப்பயணம்



## MCA



## Mids



## HOM

